Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.723/2022

**Depositions of PW- 4**

| Name | திரு.சின்னசிந்தாள் | Occupation | எலக்ட்ரீசியன் |
|---|---|---|---|
| Father's name | பெத்துநாயக்கர் | Calling | |
| Village | கோதைநாச்சியார்புரம் | Religion | |
| Taluk | ராஜபாளையம் | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 16th day of October 2025.

16.10.2025

எதிரிகள் ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது கோதைநாச்சியார்புரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் மோட்டார்களை பழுதுபார்க்கும் எலக்ட்ரீசியனாக வேலைசெய்து வருகிறேன். கடந்த 2017 ம் வருடம் நவம்பர் மாதம் ஒரு நாள் ராக்காட்சியம்மன் கோவிலருகே உள்ள பம்ப் செட்டில் மோட்டார் ஓடவில்லை என்று வேலை பார்ப்பதற்காக நான் சென்றிருந்தேன் அங்கு மேற்படி இடத்தில் தண்ணீர் பாய்ச்சும் நபர் ஒருவரும் இருந்தார். அப்போது மம்சாபுரம் காவல்நிலையத்திலிருந்து காவலர் ஒருவர் அங்கு வந்தார். அருகிலுள்ள ஓடையில் மண் அள்ளப்பட்டிருப்பதாகவும் அதை நாங்கள் பார்த்தோமா என்றும் மேற்படி காவலர்எங்களிடம் கேட்டார். நாங்கள் தெரியாது என்று கூறிவிட்டோம். அதனால் அந்த இடத்தை படம் வரைய போவதாகவும் அதில் எங்களை கையெழுத்து செய்யுமாறும் கேட்டுக்கொண்டார். நாங்களும் கையெழுத்து செய்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். **பார்வை மகஜர் அ.சா.ஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

நான் மோட்டார்பழுதுபார்க்கும்வேலை பார்ப்பதால் மோட்டார் ஏதேனும் காணாமல்போனால் போலீசார் என்னிடம் விசாரிப்பார்கள் என்றாலும் நான் அடிக்கடி காவல்நிலையம் சென்றுவருவேன் என்றாலும் சரிதான். மேற்படி நான் கையெழுத்து செய்த தாளில் என்ன எழுதியிருந்தது என்பது பற்றி எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. மணல் அள்ளப்பட்டது சம்மந்தமாக படம் வரைந்து என்னிடம் படித்துக்காண்பித்துதான் கையெழுத்து பெற்றார்கள். நான் மேற்படி பார்வை மகஜரில் காவல்நிலையத்தில்வைத்து தான் கையெழுத்து செய்தேன் என்றால் சரியல்ல. காட்டில் வைத்து கையெழுத்து செய்தேன். நான் காவல்நிலையத்தில் வைத்துதான் கையெழுத்து செய்தேன் என்றாலும் காட்டில் வைத்து கையெழுத்து செய்யவில்லை என்றாலும் மேற்படி காட்டின் உரிமையாளர் போன்ற விவரங்கள் எனக்கு தெரியாது என்றாலும் சரியல்ல. கம்மாபட்டி முகரநாயக்கரின் காடு. நான் போலீசாரின் கையிருப்பு சாட்சி என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.